*International Multidisciplinary Innovative Research Journal*
*An International refereed e-journal*

**ISSN: 2456 - 4613**
**Volume - III (1)**
**November 2018**

# ஔவையின் ஆத்திச்சூடியும், பேசும் முறைகளும்

**உமாதேவி.செ**
இணைப்பேராசிரியை, தமிழ்த்துறை
வே.வ. வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்
தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

ஔவையார் ஆத்திச்சூடி வாயிலாக 108 அறக்கருத்துக்களை எடுத்துரைத்துள்ளார். தனிமனித அறக்கருத்துக்களையே அதிகம் எடுத்துரைத்துள்ள அவர் மனம், வாக்கு, காயம் என்பதன் வாயிலாக நமது செயல்பாடுகளை வரையறுத்துள்ளார் எனில் அது மிகையாகாது. இவற்றில் வாக்கின் மூலமாக நிகழும் பேச்சு குறித்த கருத்துக்களை 18 ஆத்திச்சூடியில் குறிப்பிட்டுள்ளார். நாம் வாக்கின் (நாக்கின்) மூலமாகக் குற்றமிழைக்காமல் பேசும் முறை குறித்து, அவர் எடுத்துரைத்துள்ள கருத்துக்களும், அக்கருத்துக்களை எடுத்துரைத்த பாங்கும் இங்கு விளக்கப்பட்டுள்ளன.

## முன்னுரை

தமிழ்க்கவி ஔவையார் விநாயகப் பெருமானின் திருவருள் பெற்றவர். முப்பால் திறத்தையும் இறையருளாகப் பெற்ற அவர் தமிழ்க் குழந்தைகளாகிய நாம் அறிவிலும், ஆற்றலிலும், வீரதீரத்திலும் சிறந்து விளங்க ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை என்னும் அறப்பாலைத் தாய்ப்பாலாக மீண்டும் மீண்டும் நமக்கு ஊட்டி மகிழ்ந்தவர். அத்தாயின் சீரிய சிந்தனைகள் நம் வாழ்க்கையை வளப்படுத்தும் பேரிலக்கியக்கடலில் கிடைத்த அரியவகை முத்துக்களாகும். ஔவையாரால் வழங்கப்பட்ட நான்கு நீதிநூல்களும் தமிழ்மொழியின் தலையாய நீதிநூல்களாகத் திகழ்கின்றன. அவற்றில் ஆத்திச்சூடியில் பேசும்அறம் குறித்துக் கூறப்பட்டுள்ள கருத்துக்களே இங்கு விளக்கப்பட்டுள்ளன.

## ஔவையின் திறம்

ஔவையாரால் வழங்கப்பட்ட நான்கு நீதிநூல்களும் தமிழ்மொழியின் தலையாய நீதிநூல்களாகத் திகழ்கின்றன. விநாயகர் அகவல் ஞானஒளி விளக்காகத் திகழ்கிறது. இவருடைய ஆளுமைத்திறனும், ஞானமும் இவரைப் பரம்பொருளின் அருகிலேயே அமரவைத்திருக்கிறது என்பது போற்றுதற்குரியதாகும். மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் உள்ள சங்கத்தார் கோயிலில், தமிழ்ச்சங்கத்தின் தலைவர் இறையனாராகிய மதுரை சொக்கநாதப்பெருமானின் அருகிலேயே அமர்ந்திருக்கும் பெருமையை இவ்வம்மையார் பெற்றிருக்கிறார். இவர் தம்முடைய வாக்கிலும், நெறியிலும் அறத்தைக் கையாண்டார் எனில் அதுமிகையாது.

## அறமே இன்பம்

மக்கள் வாழ்வில் வெற்றி பெறுவதற்காக அனுபவம் மிக்க பெரியோர்களால் கூறப்பட்டனவே அறக்கருத்துகளாகும். அறச்சிந்தனையும், செயலுமே வாழ்விற்குத் தேவையான அனைத்தையும் வழங்கும் தன்மையுடையன. அறத்தைவிட மனிதஉயிர்க்கு நன்மைதரக்கூடியது வேறு எதுவும் இல்லை என்பது ஆன்றோர் முடிவாகும். அறத்தின் வழியான வாழ்வே தனிமனிதனுக்கும், சமூகத்திற்கும் அமைதியையும், இன்பத்தையும் தருகிறது.

"அறத்தால் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல" (குறள் 39)

என்ற வள்ளுவர் வாய்மொழி இதனை உணர்த்துகிறது.

## ஆத்திச்சூடியும் அறவாழ்க்கையும்

ஔவையின் ஆத்திச்சூடி, தனிமனித அறத்தையே பெரும்பாலும் எடுத்துரைக்கிறது எனலாம். ஒருவன் செய்ய வேண்டியன யாவை? செய்யக்கூடாதன யாவை? என்பனவற்றை எந்த விதமான நெகிழ்ச்சிப் போக்குமின்றி வரையறுத்துக் கூறுகிறது. 'நான்' என்ற அகப்பற்றிலும், 'எனது' என்ற புறப்பற்றிலும் நாம் நமது சிந்தனையைச் செலுத்துவதாலே (அறியாமையின் காரணத்தினாலேயே) நாம் செய்கின்ற நெறியிலிருந்து விலகிச் செல்கின்றோம். நாம் அறிவின் துணையோடு மனம், வாக்கு, காயம் என்ற மூன்றின் வாயிலாகவும் அறத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். மனம் தெளிவாகவும், வாக்கு தூய்மையாகவும், உடலால் செய்யும் செயல் சரியானதாகவும் அமைத்து வாழ்வதே அறவாழ்க்கையாகும்.

ஔவையார் ஆத்திச்சூடிக் கருத்துக்களை மேற்குறிப்பிட்ட தன்மையில் அமைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மனம் (17) வாக்கு (18) காயம் (33)

ஆகியன தனித்தனியாகவும், மனம், செயலுடன் இணைந்த தன்மையிலும் (13), மனம், சொல் மற்றும் செயலுடன் (27) இணைந்த தன்மையிலும் செயல்பட வேண்டிய பாங்கினைக் குறிப்பிட்டுள்ளார். இவையனைத்தும் அறவாழ்க்கைக்கும் இன்ப வாழ்க்கைக்கும் வழிகோலுவன ஆகும்.

## மனமும் அதன் செயல்பாடும்

கூர்த்த அறிவு, ஆராய்ந்து அறிவுறுத்துகின்ற ஒன்றை மனமானது ஏற்க மறுக்கின்ற போது சொல்லும், செயலும் மாறுபடுகின்றன. அறிவின் செயல்பாடு சரிவர நிகழ்ந்து அதை மனம் ஏற்கின்ற போதே சிந்தையில் தெளிவு ஏற்படுகிறது. அறிவாற்றல் குறைவு பட்டுத் தோன்றும் போது மனம் தெளிவில்லாமல் இச்சைக்கு உட்பட்டு, கட்டுப்பாடற்று, எதை வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் எண்ணும் தன்மையும், செயல்படும் தன்மையும் உண்டாகிறது. அதனால் வாக்கும், செயலும் நெறியின்றிச் செயல்படுகின்றன. மனதின் தூய்மையும், தூய்மையின்மையும் சொல்லிலும், செயலிலும் வெளிப்பட்டுக் குற்றமிழைக்க (பாவம் செய்ய) நேரிடுகின்றது. இங்ஙனம் சொல்லினால் ஏற்படும் பாவத்தினை வாக்கினால் செய்யும் பாவகர்மங்கள் என்கின்றனர்.

## வாக்கும் அதன் குற்றங்களும்

“சதா சர்வகாலமும் ஆன்றோர்களையும், சான்றோர்களையும், பெரியோர்களையும், பிற மதங்களையும், தூசிப்பதும், பிறரைத் தகாத வார்த்தைகளால் பேசுவதும், அசத்தியமான (உண்மைக்கு மாறான) வார்த்தைகளைப் பேசுவதும், ஒன்றை மறைக்க வேறொன்றைக் கூறுவதும் இது முதலானவைகளே வாக்கினால் செய்யும். பாவகர்மங்களாகும்.”[1] இக்குற்றங்களை நீக்கிச் செயலாற்ற வேண்டியது நமது கடமையாகிறது. “நம்முடைய நாக்கு ஒரே நேரத்தில் கர்மேந்த்ரியமாகவும் ஞாநேந்த்ரியமாகவும் செயல்படுகிறது. உணவை உண்ணும் போது சுவையை அறியும் ஞானேந்த்ரியமாகவும், பேசும்போது, கர்மேந்த்ரியமாகவும் நாக்கு செயல்படுகிறது. நாக்கானது ஒரே நேரத்தில் அறிவுக் கருவியாகவும், செயற்கருவியாகவும் இயங்குகிறது”. இங்ஙனம் செயற்கருவியாகப் பயன்படுகின்ற நாக்கை நாம் எங்ஙனம் தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்னும் தன்மையில் ஔவையார் கீழ்வரும் கருத்துக்களைக் குறிப்பிடுகிறார்.

நமது சொல்லில் ஏற்படும் குற்றங்கள் காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்றினாலேயே ஏற்படுகின்றன. இக்குற்றங்களின் தன்மையறிந்து

அக்குற்றத்தை நீக்குவதற்கான சொற்களையே பயன்படுத்தி அதனை விலக்குமாறு ஔவையார் அறிவுறுத்தியுள்ளார்.

| வரிசை எண் | ஆத்திச்சூடி | | வரிசை எண் | ஆத்திச்சூடி | |
|---|---|---|---|---|---|
| 1 | உடையது விளம்பேல் | 5 | 10. | பழிப்பன பகரேல் | 76 |
| 2. | ஔவியம் பேசேல் | 12 | 11. | பிழைபடச் சொல்லேல் | 78 |
| 3. | கண்டொன்று சொல்லேல் | 14 | 12. | மிகைபடச் சொல்லேல் | 89 |
| 4. | வஞ்சகம் பேசேல் | 27 | 13. | வல்லமை பேசேல் | 98 |
| 5. | கடிவது மற | 32 | 14. | வாது முற்கூறேல் | 99 |
| 6. | சித்திரம் பேசேல் | 45 | 15. | வெட்டெனப் பேசேல் | 104 |
| 7. | சுளிக்கச் சொல்லேல் | 47 | 16. | ஓரஞ் சொல்லேல் | 108 |
| 8. | சொற்சோர்வு படேல் | 52 | 17. | ஞயம்பட உரை | 17 |
| 9. | நொய்ய உரையேல் | 74 | 18. | மொழிவது அறமொழி | 96 |

**வாக்கின் பிறழ்ச்சியும், அறத்தின் வீழ்ச்சியும்**

ஔவியம் பேசேல், வஞ்சகம் பேசேல், சித்திரம் பேசேல், வல்லமை பேசேல், வெட்டெனப் பேசேல் என்னும் ஐந்து சொல்லாடல்களினால் ஏற்படும் குற்றங்களும் பின்விளைவுகளும் அதிகரிக்கும். இத்தகைய பேச்சினை அறவே நீக்க வேண்டும் என்பதால் அதனைத் தவிர்க்க ஆணையிட்டும், அறுதியிட்டும் ‘பேசேல்’ என்று கட்டளையிடுகின்றார்.

1. கூனி, இராமன் மீது ஔவியம் என்னும் பொறாமையைக் கொண்டதால் இராமனுக்குப் பட்டாபிஷேகம் நடைபெறவிடாமல் தடைசெய்கிறாள்.

2. பாண்டவர்களின் வளர்ச்சியில் துரியோதனன் பொறாமை கொண்டதால் வஞ்சக வார்த்தை பேசி அவர்களைச் சூதாடி வென்று வீழ்த்தி கானகத்துக்கு அனுப்புகிறான்.

3. இலக்குவனிடம் மூக்கறுப்பட்டு வந்த சூர்ப்பனகை, தனது செயலை மறைத்து தன் அண்ணன் இராவணனிடம் சீதையின் அழகை அடுக்கடுக்காக எடுத்துரைக்கிறாள். அவள் சீதையின் அழகை விவரித்த சித்திர மொழி இராவணனுக்கு தாபத்தோடு கோபத்தையும் ஏற்படுத்திச் சீதையை சிறையெடுக்கச் செய்கிறது.

4. இராவணன், கும்பகர்ணன், இந்திரஜித், சூரபத்மன், சிங்கமுகன், இரணியன், இரணிய கசிபு ஆகியோர் அதீதமான வல்லமை பெற்றிருந்தாலும் பரம்பொருளின் முன் பேசிய வல்லமைப் பேச்சால் அழிக்கப்படுகிறார்கள்.

5. திரௌபதியின் துகில் உரியப்படும் போது கண்டித்த விகர்ணனை அழுக்காறாமையால் துரியோதனன் உரிமையை மறுத்து வெட்டென (வெடுக்கெனப்) பேசிச் சீறுகிறான். அதனால் பாஞ்சாலி, பீமன், அர்ச்சுனன் ஆகியோரின் சபதத்தை துரியோதனன் ஏற்க நேர்கிறது.

மேற்குறிப்பிட்ட இடங்கள் அறச்செயலிலிருந்து மாறுபட்டனவாகவே உள்ளதை அறியலாம்.

**சிக்கலும் மனவேதனையும்**

கண்டொன்று சொல்லேல், சுளிக்கச் சொல்லேல், பிழைபடச் சொல்லேல், மிகைபடச் சொல்லேல், ஓரஞ்சொல்லேல் எனும் ஐந்து சொல்லாடல்களும் வெகுளியின் காரணமாகப் பிறக்கின்றன. இறுதியிலுள்ள இரண்டும் காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று நிலைகளிலும் தோன்றுவனவாக உள்ளன. இச்சொல்லாடல்களும் மிகுந்த குற்றத்துடன் பாவத்தையும் உண்டு பண்ணும் தன்மையுடையன ஆகும்.

ஓரிடத்தில் பார்த்தவற்றையும், கேட்டவற்றையும் மாறுபட்டுச் சொல்லுதல் தகாத செயலாகும். அதைப் போலவே செய்ததைக் கூறிக் காட்டலும், அருவருக்கும் படியாகப் பேசுதலும், கேட்பவரை முகம் சுளிக்கச் செய்யும் செயலாகும். பிறரைக் குறை(பிழை) படப்பேசுதல், மிகைபடப்பேசுதல், நடுநிலையின்றி ஒரு சார்பாகப் பேசுதல் ஆகிய மேற்கூறிய ஐந்தும் குடும்பம், உறவு, நட்பு வட்டாரம், தொழில் செய்யுமிடம் ஆகிய இடங்களில் பிரிவுகளையும், சிக்கல்களையும் உருவாக்கி மனவேதனையைக் கொடுக்கும். எனவே இத்தகைய பேச்சுக்களையும் தவிர்க்க வேண்டும் என்று உறுதிபட எடுத்துரைக்க ‘சொல்லேல்’ என்று மறுத்துரைக்கின்றார்.

**மறத்தலும் மன்னித்தலும்**

‘கடிவது மற’ என்பது இடம், பொருள், ஏவல், நபர், காலம், கருத்து, சூழல் என எவற்றையும் பார்க்காமல் விரைந்து கடிந்து பேசுவதாகும். இத்தகைய பேச்சினால் பேசியவரும், பேசியதற்குக் காரணமானவரும் வாழ்நாள் முழுவதும் துன்பப்படக் கூடிய நிலை ஏற்படும். இராமாயணத்தில் மாயமானைப் பிடிக்கச் சென்ற இராமன், வீழ்ந்தான் என்று கருதி வருந்தும் சீதை, பொறுமையற்ற நிலையில் கொதிக்கும் தன்மையுடையவளாகிறாள். இலக்குவன் சீதையை ஆற்றுவிக்க முற்பட்ட போதும் அதை அவள் மறுத்துரைக்கிறாள்

"நின்றநின் நிலையிது நெறியிற்று அன்றென
வன்தறு கண்ணினள் வயிர்த்துக் கூறுவாள்"[3] (பாடல் எண் 12)
"வெருவலை நின்றனை வேறென் யானினி
எரியிடை வீழ்ந்துயிர் இறப்பன் ஈண்டெனா"[4] (பாடல் எண் 13)

என்று கூறி சீதை இலக்குவனைக் கடிந்து கொள்கிறாள். இங்ஙனம் இவள் பேசிய சுடுசொல் இருவரையும் பாதிக்கிறது. இலங்கையில் அனுமன் சீதையைக் கண்டு வணங்கி உரையாடிய போது, இலக்குமணனைத் தான் நாவினால் சுட்ட பாவச் செயலுக்குத் தண்டனையாகவே தான் அசோகவனத்தில் துன்புறுவதாக எண்ணிய சீதை, இலக்குவனிடம் தனது துயரைப் போக்குமாறு செய்தி அனுப்புகிறாள். இத்தகு துன்பநிலை ஏற்படுவதைத் தவிர்க்கவே கடிந்து பேசுவதைத் தவிர்க்க வேண்டி மறக்க வேண்டும் என்கிறார். அங்ஙனம் கடிந்து பேசப்பட்டாலும் அதுவும் மறக்கப்படவேண்டும், ஏனெனில் மறப்பது ஒன்றே மன்னிப்பதற்குச் சமமானதாகும். மன்னித்தலே மீண்டும் குற்றம் ஏற்படாதிருக்க வழியும் ஆகும்.

**சொற்சோர்வும் சொற்காத்தலும்**

'சொற்சோர்வு படேல்' என்பது உரிய நேரத்தில் உரிய சொல்லையோ, செய்தியையோ கருத்தையோ மறதியினால் (மயக்கத்தால்) எடுத்துரைக்கத் தவறக்கூடும். அங்ஙனம் நிகழ்தல் ஒருவருடைய வளர்ச்சியைப் பாதிக்கும். சிலப்பதிகாரத்தில் மன்னன் பாண்டியன் நெடுஞ்செழியனிடம், பொற்கொல்லன், "கோயிலில் இருந்து சிலம்பினைத் திருடிய கள்வன், அச்சிலம்புடன் என் குடிலில் வந்துள்ளான்" என்று கூறியபோது, மன்னன் ஆராயாமல், "அவனைக் கொன்று அச்சிலம்பினைக் கொணர்வீர்" என்று காவலர்க்கு ஆணையிட்டான். சொற்சோர்வின் காரணமாக இங்ஙனம் கூறியது குற்றமற்ற கோவலனை குற்றவாளியாக்கிக் கொலை செய்யும்படி நேர்ந்தது.

தன்னிடம் இருப்பதைப் பேராசையின் (காமத்தின்) காரணமாகவும் அறியாமையின் (மயக்கத்தில்) காரணமாகவும் எடுத்துரைக்கும் பாங்கு நலிவை ஏற்படுத்தும் என்பதால் 'உடையது விளம்பேல்' என்று அறிவுறுத்துகிறார். பொதுச் சொத்தாக இருப்பதைத் தனது வல்லமை என்று கருதி, எளிதாகவோ வலிதாகவோ பெறுகின்ற ஒவ்வொன்றையும் 'தன்னுடையது' என்று எண்ணுவதும், கூறுவதும் தகாத செயலாகும் என்பதையும் இங்கே உணர முடிகின்றது.

பிறர் மனம் நொந்து போகும்படி பேச வேண்டாம். பிறரை இகழ்ந்து அவர்கள் இழிவான நிலையை அடையும் படியான கொடிய கடுஞ்சொற்களை (வெகுளியால்) பேச வேண்டாம். நல்லோர் முன்னும், பெரியோர் முன்னும் பொருளற்ற சொற்களாலும், கோபச் சொற்களாலும், வாதம் செய்தலில் ஈடுபட வேண்டாம் என்று பாங்காக

எடுத்துரைக்கும் இம்மூன்று இடங்களிலும் சொற்களின் செயல்பாட்டுத் தன்மைக்கேற்ப உரையேல், பகரேல், கூறேல் என்று குறிப்பிட்டுள்ளார்.

## குறளும், முக்குற்றமும்

ஔவையார் பேசக் கூடாத முறை தொடர்பாகக் கூறிய மேற்கண்ட கருத்துக்களை வள்ளுவர் அழுக்காறாமை, வெகுளாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, வெகுளாமை என்னும் அதிகாரங்களில் குறிப்பிட்டுள்ளார். இவற்றை இனியவை கூறல், வாய்மை என்ற அதிகாரங்களின் வழி, முறையாகப் பேசும் பாங்கினையும் சுட்டியுள்ளார்.

காமம், வெகுளி, மயக்கம் இவற்றின் காரணமாகப் பேசப்படும் பேச்சுக்கள் அறமல்லாது இருப்பதால் அவை துன்பத்தைத் தோற்றுவிக்கின்றன. எனவே இவற்றை நீக்கி வாழ்வதே இன்பப்பெருவாழ்விற்கு வழிவகுக்கும். அதனால் தான் வள்ளுவரும்

“காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்” (குறள் 360) என்று குறிப்பிட்டுள்ளார்.

## முடிவுரை

காமம், வெகுளி, மயக்கம் இவற்றினால் வாக்கு என்னும் சொல்லில் குற்றம் ஏற்படா வண்ணம் நாம் பேசுகின்ற போது அதுவே அறமொழியாகிறது. யாருக்கும் துன்பம் தராத உயர் மொழியாகிறது. பிறர் மனதில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் படியான நல்ல நயமிக்க உரையாகிறது. இதையே ஔவையார் ‘ஞயம்பட உரை’, ‘மொழிவது அறமொழி’ என்று குறிப்பிடுகிறார். ஞயமான மொழி மனதுக்கு இதத்தையும் அறமொழி உண்மையையும், உயர்வையும் எடுத்துரைக்கின்றது. பேசக் கூடாத இடங்களில் பேசாமல் அமைதி காத்து நன்னெறியில் செயல்பட்டு பிறருக்கு முன்னுதாரணமாகவும் வெற்றிகரமாக வாழ்வதும் ‘மொழிவது அறமொழி’ என்பதன் பாற்படும் எனில் அது மிகையாகாது.

## அடிக்குறிப்பு

1. தத்போதம், ப.21 மலர்-16, இதழ்-2, செப்டம்பர் 2018
2. வேதநெறி, ப.3 ஸ்ருதி:7, ஸ்மிருதி:10, பிப்ரவரி 2009
3. கம்பராமாயணம், ஆரணிய காண்டம், சடாயு உயிர்நீத்த படலம், (பா.எண் 12)
4. கம்பராமாயணம், ஆரணிய காண்டம், சடாயு உயிர்நீத்த படலம், (பா.எண் 13)